
# Path to Dharma

## தர்ம நெறி (Dharma Neri)


## 88



Sri SankarPublications
KshethraVinayakaTemple, Sri Munneswaram,Chilaw, Sri Lanka.
ஷேத்திர (வயல்) விநாயக ஆலயம், ஸ்ரீமுன்னேஸ்வரம், சிலாபம், ஸ்ரீலங்கா

Author - B.S.Sarma

April 2015 ஏப்ரல்(தை/மாசி)



**Annual 'Brahmothsava' at Rockbank Murugan temple Melbourne,Australia,-2015**



**Annual 'Brahmothsava' at Rockbank Murugan temple Melbourne,Australia,-2015**



Editorial.

The monthly publication 'Path to Darma', by KshethraVinayakaTemple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka, is presenting the 88th number this month. The main imperative endeavor of this monthly magazine is to pass on the vision associated to Hindu dharma basically by replies to the issues put forward by the anxious readers. The comments and analysis of the readers are appreciated.

B.S.ivaramakrishnaSarma,


KshethraVinayakaTemple,SriMunneswaram, Chilaw, Sri Lanka. April, 2015

**All the articles in this issue are from Sivaratri malar, a magazine edited & published by B.Sivaramakrishna Sarma,Munneswaram,Chilaw,Srilanka ,Printed 1970 at The Colombo Cooperative Printers' Society Ltd. 72,Kew Road,Colombo-02**

# வடிவழகி

**வித்துவான் கி. வா. ஜகந்நாதன், M.A**
**ஆசிரியர்: கலைமகள்**

பிறிவிப் பிணிபோக்கும் பேரின்பம் ஆக்கும்
திறமுற் றிடும் வாழ்வு சேர்க்கும்- அறம் வளர்க்கும்
முன்னேச் சுரத்து முதல்வி வடிவழகி
தன்னேரில் தாமரைத் தாள்.




சந்தாபந் தீர்க்கும் தவத்தின் பயனளிக்கும்
நொந்தார்க்கு வேதனையை நூக்கிவிடும்- எந்தாயாம்
அன்னைமுன் னீச்சுரத்து ளாரும் வடிவழகி
பொன்னலரும் தாள் என்னும் பூ.

மும்மலமும் போக்கியின்ப முத்தியினை நல்கி என்றும்
செம்மை பெற வைக்கும் திருவருளார்- அம்மை
வடிவழகி முன்னெச் சரத்தில்வாழ் மாதா
அடிமலரி லேபுகுந்ததிட் டால்.

# சிவலிங்க தத்துவப் பொருள் அருவுருவத் திருமேனி

**'சிவாகம ஞானபானு'**
**சிவஸ்ரீ ச. குமாரசுவாமி குருக்கள், அச்சுவேலி.**

ஒரு குணங்களும், குறியும் இல்லாததா, மலமற்றதா, ஏகமா, தோற்றமொடுக்கமில்லாததா, எண்ணற்ற ஆன்மாக் களுக்குணர்வா, அசைவற்றதா, சர்வவியாபியா, பராசக்திக்குக் காரணமா, முத்திப் பொருளா இருப்பவர் சிவபெருமான் ஒருவரே என்று சிவாகமம் கூறும்.

உருவம் முதலியவற்றைப் பொருந்தாத சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த பெருங் கருணையினாலே பஞ்சகிருத்தியஞ் செது, மலநீக்கஞ் செய்து, முத்தியிற் சேர்க்கும் திருவருளினாலே அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூத்திமத் திருமேனிகளைக் கொண்டருளினார்.

சக்தியானது, அக்கினியும் சூடும் போலவும், பூவும் மணமும் போலவும், சிவத்திலிருந்து பிரித்தறிய முடியாத வல்லமையாம். அதன் வடிவம் ஞானமேயாம். அந்த ஞானமே பராசக்தியெனப்படும். பராசக்தியில் ஆதிசக்தியும், அதில் இச்சாசக்தியும், அதில் ஞானசக்தியும், அதில் கிரியாசக்தியும் தோன்றியன. இச்சக்திகளிலிருந்து யோகிகளும், ஞானிகளும் கிரியையாளரும் செய்யும் தியான பூசா நிமித்தமாகப் பஞ்ச சாதாக்கியங்கள் தோன்றின.

## அருவுருவத் திருமேனி

### சாதாக்கியம்

சாதாக்கியம் என்பது எப்பொழுதும் புகழப்படுவது எனப் பொருள்படும். எனவே நாமரூபாதிகள் இல்லாத சுத்தசிவம், நாமரூபாதிகள் உடையவரா அன்பர்களாற் புகழப்படுபவர் என்பது கருத்து. சாதாக்கியங்கள் சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம் என ஐந்தாம். பராசக்தியின் அம்சமா சிவ சாதாக்கியமும், ஆதிசக்தியின் அம்சமா அமூர்த்தி சாதாக்கியமும், இச்சாசக்தியின் அம்சமா மூர்த்திசாதாக்கியமும் ஞானசக்தியின் அம்சமா கர்த்திரு சாதாக்கியமும், கிரியாசக்தியின் அம்சமா கன்ம சாதாக்கியமும் தோன்றின. இதுவே பஞ்ச சக்திகளிடமாகச் சாதாக்கியங்கள் தோன்றிய கிரமமாகும்.

சிவலிங்கத்திலே சம்ஹாரகாலத்தில் சகல பிரபஞ்சங்களும் ஒடுங்கிச் சிருட்டி காலத்திலே அங்ஙனம் தோன்று கின்றமையால் லிங்கமெனப்படும் என்று சுப்பிரபேதாகமம் கூறுகின்றது. "லிங்கம்" என்னும் பதமானது சித்திரித்தல் எனப் பொருள்படுகின்றது. லிகி என்னும் தாதுவில் நின்றும் பிறந்தமையால் சிவபெருமான் சிருட்டி முதலிய பஞ்ச கிருத்தியங்களால் உலகத்தைப் படைக்கின்றார் எனப் பொருள்படும் என்று வருண பத்ததி கூறும்.

சிவலிங்கம் ஞானசக்தியைக் குறிக்கும். அதன் கீழுள்ள ஆவுடையாள் கிரியாசக்தியைக் குறிக்கும். பரவெளியைக் குறிக்கும் லிங்கத்திருவுருவே எப்பொழுதுமோர் அசைவுண்டு.

அதுவே பராசக்தி எனப்படும். ஆன்மாக்களின் பாசத்தை நீக்குவதற்காகவே அசைதற் சக்தி லிங்கத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. அவ்வசைவு லிங்கத்தில் உண்டென்பதை உணர்த்து வதற்காகவே ஆவுடையாள் லிங்கத்தைச் சூழ்ந்து கீழடங்கி அமைந்திருக்கிறது. ஆவுடையாளது ஒரு பக்கத்தில் நீண்டிருப்பதாகிய கோமுகி யானது ஆன்மாக்களைத் திரு நோக்கம் செயும் குறிப்பாக அமைந்திருக்கிறது.

அவ்விலிங்கம் பிரமபாகம், விஷ்ணு பாகம், ருத்திரபாகம் என மூன்று பாகங்களையுடையதாயிருக்கும். அவற்றுள் பிரமபாகமானது நபுஞ்சலிங்கமும், விஷ்ணு பாகமானது ஸ்திரீலிங்கமும், உருத்திர பாகமானது பும்லிங் கமுமாம் ஆண்ரூபம், பெண்ரூபம் நபுஞ்சக ரூபமாயிருப்பது அவன், அவள் அது எனப்படும் உலகத்திலே உள்ள உயர்திணைப் பொருள்களும், அஃறிணைப் பொருள்களும் தம்மிடத்திலே தோன்றியொடுங்குகின்றன என்பதைக் குறிப்பதாகும்.

இந்த உண்மையைக் குறித்தே ஆலயங்களில் பிரதிட்டா காலங்களில் திரிகண்ட நியாசமும், பரிசாகுதியும் செய்யப்படுவதாகும்.

லிங்கமே பிரணவ முதற் பொருள். இதன் சோதித் தன்மையே அகர உகர மகரமாயிருக்கும். அகரம் சிவமும், உகரம் சக்தியும், மகரம் கலை வடிவமாம். அகரம் கண்டமும், உகரம் கோமுகமும், மகரம் வட்டமும் பிரணவம் லிங்கமுமாயிருக்கும்.

**திருமந்திரம்**

அகார முதலாவனைத்துமா நிற்கும்
உகார முதலாவுயிர்ப் பெதி நிற்கும்
அகார வுகார மிரண்டு மறியின்
அகார வுகார மிரண்டு மிலிகமதாமே.

**சிவஞானசித்தியார்**

ஷணயுஞ் சிவமுமா தன்மையிவ் வுலகமெல்லா
மொத்தொவ்வா வாணும் பெண்ணு முயர்குண குணியுமாகி
வைத்தனளவ ளால்வந்த வாக்கமில் வாழ்க்கையெல்லா
மித்தையு மறியா பீடலிங்கத்தி னியல்பு மோரார்.

லிங்கமென்பது சிவமேயாம். சிவத்துக்கு பெயராகிய லிங்கமென்னும் பதம் உபசாரத்தால் பக்குவம் நோக்கி ஆன்மாக்களின் தியான பூசா நிமித்தம் அச்சிவம் விளங்கப் பெறும். ஆதாரமாகிய சிலை முதலியவற்றுக்கும் வழங்கப் பெறுகின்றது.

# கந்தபுராணத்தில் சிவராத்திரி மகாத்மியம்

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

“ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி” இறைவன். இறைவனின் அடியும் முடியுங் காண முயல்வது வீண் செயல்.

சம்பந்தக் குழந்தையின் அடிமுடிகளின் காண்டற்கருமையைப் பதிகந்தோறும் ஒன்பதாம் பாடலில் வலியுறுத்தியருளியிருக்கின்றது.

அடிமுடி தேடிய பிரம விஷ்ணுக்கள் பற்றிப் பதிகத்தின் ஒன்பதாம் பாடல் தோறும் வருவது சிந்திக்கத்தக்கது.

‘பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியினை காண்கிலா வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகேதீச்சரத் திருத்தவெம் பெருமானே’

என்பது சம்பந்தக் குழந்தை அருளிய திருக்கேதீசுவரத் தேவாரத் திருப்பதிகத்தின் ஒன்பதாவது பாடல்.

பிரம தேவர், தாமும் விஷ்ணு மூர்த்தியும் அடிமுடி தேடியதைப் புதல்வனாகிய தக்கனுக்கு உபதேசித்து, கந்தபுராணத்தில் வரும் அடிமுடி தேடு படலம். பின்வருஞ் செய்யுள்கள் அப்படலத்திற் குறிப்பிடத்தக்கவை:

‘கீண்டுநிலன் இருவிசும்பிற் கிளர்ந்துமடி முடியுணரேம்
மீண்டுமவன் றன்னருளான் மிடல்பெற்று வந்தனமால்
ஈண்டுசிவன் றனைவழிபட் டிருவருமன் னவன்ற்றங்
காண்டுமென யானுரைப்பக் கண்ணுமங் கதற்கிசைந்தான்.’ (85)

இருவருமச் சிவனுருவை யியன்முறையாற் றாபித்து
விரைமலர்மஞ் சனஞ்சாந்தம் விளக்கழலா தியவமைத்துப்
பொருவருபூ சனைபுரிந்து போற்றிசெது வணங்குதலும்
எரிகெழுசரோ திக்கணித்தா வெந்தையவண் வந்தனனே.' (86)

'மைக்களமும் மான்மழுவும் வரதமுடன் அபயமுறும்
மெக்கரமும் நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணுஞ்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமா
முக்கணிறை யாங்காண முன்னின் அருள் புரிந்தான்.

'அரியும் யானும்முன் தேடுமவ் வனற்கிரி யனல
கிரியெ னும்படி நின்றாதா லவ்வொளி கிளர்ந்த
இரவ தேசிவ ராத்திரி யாயின திறைவற்
பரவி உந்தனர் அன்னதோர் வைகலிற் பலரும்.'

அரியும் யானும் முன் தேடும் அ அனல்கரி- திருமாலும் யானும் முன்னர் அடியும் முடியுந்தேடா நின்ற அந்த அக்கினி மலையானது - அனல கிரி எனும்படி நின்றது - அருணாசலம் என்று புகழ்ந்து கூறும்படி விளங்கியது- அ ஒளி கிளர்ந்த அது இரவே சிவராத்திரி ஆயினது - அந்தச் சோதி வடிவம் எழுந்தருளிய அந்த இரவுதானே சிவராத்திரி என்கின்ற புண்ணிய காலம் ஆயிற்று- அன்னது ஓர் வைகலிற்பலரும் இவைற் பரவி உந்தனர் - அத்தகைய ஒப்பற்ற மகா சிவராத்திரியில் உலகத்தோர் பலரும் சிவலிங்கப் பெருமானை விதிப்படி பூசித்து வீடு பெற்றனர்.

'அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம்'
'எத்திறம் ஈசன் நிற்பன் அத்திறம் அவளும் நிற்பள்'

என்ற தொடர்கள் சிவஞான சித்தியாரில் உள்ளவை.



நாம் அனுபவிக்கும் வாழ்க்கைச் செல்வங்களனைத்தும், சிவ சக்தியாகிய தேவியினால் நமக்குக் கிடைத் தவை. தேவியோ பரம்பொருளாகிய இறைவனை இன்றியமையாதவள் என்றும் பிரியாதவள்

'இறைவன் இறைவியை ஒரு கணம் விலகி ஒரு செயலுமின்றிச் சும்மா இருந்தாலோ! என்றும் பிரியாத இறைவி ஒரு கணம் இறைவனைப் பிரிந்தாலோ! உலகுயிர்களின் கதி என்னாம்! இறைவனைப் பிரிந்து இறைவிதான் செய்யக்கடவது யாதோ! 'அவனின்றி அணுவும் அசையாதே.'

இவ்வாறாயதொரு கற்பனைக்கெட்டாத சம்பவம் கந்தபுராணத்தில் உமை கயிலை நீங்கு படலத்தில் வருகின்றது.

'தேவர்கள் நாயகன் செய லிலாமையால்
ஆவிகள் யாவையும் சடம தாகியே
ஓவிய மேயென உணர்வின் றுற்றன
பூவுல கேமுதற் புவனம் யாவினும்' (15)

'ஆட்டுவித் திடுபவன் அதுசெ யாவழிக்
கூட்டுடைப் பாவைகள் குலைந்து வீழ்ந்தென
நாட்டிய பரனருள் நடாத்த லின்மையால்
ஈட்டுபல் உயிர்த்தொகை எனைத்தும் மாந்தவே'

உயிர்கள் உயிர்ப்பின்றிச் சடப்பொருள்கள் போலாயின. ஒளிச் சுடர்கள் மறைந்தன. இருள் கவிந்தது. சர்வசங்கார நிலை போன்றதொரு நிலையை உலகு எதியது.

இறைவன் குறிப்பினால் சிவசாரூபம் பெற்றவர்களுட் சிறந்தோரான பதினொருவர் உருத்திரர் மத்தியார்ச்சுனம் எனப்படும் திருவிடை மருதூருக் வந்து, நீண்டு செல்வதாகிய இராத்திரியை நான்கு கூறு செய்து, சிவலிங்கப் பெருமானை நான்கு யாமத்தும், உலகுயிர்கள் உயும் பொருட்டு அர்ச்சனை செவராயினர்.

'வான்குலாம் வில்லுவ மருமென் பாசடை
தேன்குலாம் மரையிதழ் செய சாதிவீ
கான்குலாம் வலம்புரி கடவுட் டொல்பெயர்
நான்கியா மத்தினு நவின்று சாத்தியே.' (28)

'ஏயவான் பயறுபால் எண்ணல் ஒதனம்
தூயநல் உணவிவை தொகுத்துக் கண்ணுதல்
நாயகன் முன்னுற நான்கியா மத்தும்
நேயமொடு அம்முறை நிவேதித் சாத்தியே.' (29)

விதிப்படி வழிபாடு செதபோது இறைவன் பிரசன்னமாயினான் பிரம விஷ்ணுக்கள் துயில் புரிந்தெழுந்தவர்கள் போல எழுந்தார்கள். உலகுயிர்கள் உந்தன.

உருத்திரர்கள் பின்வருமாறு வேண்டுதல் செதார்கள்:

'நிற்றலும் அல்லி எலம்போல நின்னடி எனையரேனும்
பற்றுடன் அருச்சித் தோர்க்குப் பழிதவிர் மாகத் திங்கள்
உற்றிரு கதிரு மொன்றும் ஒண்பகல் முதனாட் கங்குல்
பெற்றிடு சிறப்பு நல்க வேண்டுமாற் பெரும வெறானர்.' (38)

நித்தலும் என்பது நிற்றலும் என நின்றது. நாள் தோறும் இராத்திரி காலத்தை நான்கு கூறு செய்து நான்கு யாமத்து வழிபாடும் செய்பவர்களுக்குச் சிவராத்திரி காலத்துச் செய்யும் பூசனையால் கிடைக்குஞ் சிறப்புகள் கிடைக்க வேண்டுமென்பது கருத்து. இதனாற் சிவராத்திரியின் தனிப்பெருஞ்சிறப்புச் சிந்திக்கற்பாலதாம். மாகத் திங்கள்- மாசி மாதம். இரு கதிரும் ஒன்றும் ஒண்பகல்- அமாவாசித்தினம். முதல் நாள் கங்குல்- சதுர்த்தசியின் இரவாகிய சிவராத்திரி.

சிவராத்திரி சிவவிரதம். நவராத்திரி தேவிவிரதம். நவராத்திரி சிவராத்திரிக்கு வழி செய்வது.

'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்'

என்பது திருவருட்பயன். தேவி ' தருஞ்சத்தி' தேவியே சிவத்தைத்தருபவள்.

**சங்கீதம்**

| காலம் | | ராகம் |
|---|---|---|
| விடியற்காலை | : | பூபாளம், கௌளீ, மந்தாரி, தேவக்ரியா, தேவகாந்தாரி, தன்யாசி. |
| முற்பகல் | : | பிலஹரி, மலஹரி, முகாரி, பைரவம்,குரஞ்சி. |
| மாத்யான்னம் | : | ஷாரங்கா, மத்யமாவதி, ஶ்ரீ, நீலாம்பரி. |
| பிற்பகல் | : | மோகனம், கல்யாணி, சங்கராபரணம், வஸந்தா. |
| மாலை | : | தோடி, பந்துவராளி, ஹிந்தோளம், சௌராஷ்ட்ரம். |
| முன் ராத்திரி | : | காம்போதி, சாவேரி. |
| மத்ய ராத்திரி | : | நாட, புன்னாகவராளி, ஆஹிரி, அஸாவேரி, கேதாரம். |
| பின் ராத்திரி | : | சுருட்டி, மஞ்சரி. |



# நூற்றெட்டுத் தாண்டவங்கள்

| | | |
|---|---|---|
| 1. தலபுஷ்பபுடம் | 37. வைசாக ரேசிதம் | 73. பர்சுவ ஜானு |
| 2. வர்த்திதம் | 38. பிரமரகம் | 74. கிருத்ராவலீனகம் |
| 3. வலிதொருகம் | 39. சதுரம் | 75. சந்நதம் |
| 4. அபவித்தம் | 40. புஜங்காஞ்சிதகம் | 76. சூசி |
| 5. சமநகம் | 41. தண்டரேசிதம் | 77. அர்த்த சூசி |
| 6. லீனம் | 42. விருச்சிக குட்டிதம் | 78. சூசிவித்தம் |
| 7. ஸ்வஸ்திகரேசிதம் | 43. கடிப்பிராந்தம் | 79. அபக்ராந்தம் |
| 8. மண்டலஸ்வஸ்திகம் | 44. லதாவிருச்சிகம் | 80. மயூரலலிதம் |
| 9. நிகுட்டகம் | 45. சின்னம் | 81. சர்பிதம் |
| 10. அர்த்த நிகுட்டம் | 46. விருச்சிக ரேசிதம் | 82. தண்டபாதம் |
| 11. கடிச் சின்னம் | 47. விருச்சிகம் | 83. ஹரிணப்லுதம் |
| 12. லலிதம் | 48. வியம்சிதம் | 84. பிரேங்கோலிதம் |
| 13. அர்த்த ரேசிதம் | 49. பார்சுவ நிகுட்டகம் | 85. நிதம்பம் |
| 14. வஸ்வஸ்திகம் | 50. லலாடதிலகம் | 86. ஸ்கலிதம் |
| 15. உந்மத்தம் | 51. கிராந்தகம் | 87. கரிஹஸ்தம் |
| 16. ஸ்வஸ்திகம் | 52. குஞ்சிதம் | 88. பிரஸர்ப்பிதகம் |
| 17. பிருஷ்டஸ்வஸ்திகம் | 53. க்ரமண்டலம் | 89. சிம்ஹவிக்ரீடிதம் |
| 18. திக்ஸ்வஸ்திகம் | 54. உரோ மண்டலம் | 90. சிம்ஹாகர்ஷிதம் |
| 19. அலாதம் | 55. ஆப்தம் | 91. உத்விருத்தம் |
| 20. கடீசமம் | 56. தலவிலஸிதம் | 92. உபஸ்ருதகம் |
| 21. ஆப்தரேசிதம் | 57. அர்க்கலம் | 93. தலசங்கட்டிதம் |
| 22. விப்தாப்தகம் | 58. விப்தம் | 94. ஜநிதம் |
| 23. அர்த்தஸ்வஸ்திகம் | 59. ஆவர்த்தம் | 95. அவஹித்தகம் |
| 24. அஞ்சிதம் | 60. டோலாபாதம் | 96. நிவேசம் |

| | | |
|---|---|---|
| 25. புஜங்கத்ராஸிதம் | 61. விவிருத்தம் | 97. ஏலகாக்ரீடிதம் |
| 26. ஊர்த்தவஜாநு | 62. விநிவிருத்தம் | 98. ஊரூத்விருத்தம் |
| 27. நிகுஞ்சிதம் | 63. பார்சுவக்கிராந்தம் | 99. மதஸ்கலிதகம் |
| 28. மத்தல்லி | 64. நிஸ்தம்பிதம் | 100. விஷ்ணுக்ராந்தம் |
| 29. அர்த்த மத்தல்லி | 65. வித்யுத்ப்ராந்தம் | 101. ஸம்பராந்தம் |
| 30. ரேசித நிகுட்டிதம் | 66. அதிக்ராந்தம் | 102. விஷ்கம்பம் |
| 31. பாதாப வித்தகம் | 67. விவர்த்திதகம் | 103. உத்கட்டிதம் |
| 32. வலிதம் | 68. கஜகிரீடிதகம் | 104. விருஷபக்ரீடிதம் |
| 33. கூர்ணிதம் | 69. தலஸம்ஸ்போடிதம் | 105. லோலிதம் |
| 34. தண்டபம் | 70. கருடப்லுதகம் | 106. நாகாபசர்ப்பிதம் |
| 35. புஜங்கத்ரஸ்த ரேசிதம் | 71. கண்டசூசி | 107. சகடாஸ்யம் |
| 36. நூபுரம் | 72. பரிவிருத்தம் | 108. கங்காவதரணம் |

# சோதனை

**கிருபானந்தவாரி**

**ஆசிரியர்: திருப்புகழமிர்தம்**

மனிதன் கடைத்தேற வேண்டிய வழிகள் பல. அவற்றுள் முக்கியமான வழி ஒன்று உண்டு. அது தன்னைத்தானே சோதனை செய்து கொள்ளல்.

வியாபாரிகள் கடையை இரவில் மூடும்போது இரும்புத் திட்டம் பார்த்துக் கொள்வார்கள். அதுபோல் ஒவ்வொரு மனிதனும் படுக்கின்றபோது 'நாம் இன்று என்ன நற்கருமம் புரிந்தோம்? வாக்கால் இறைவனுடைய நாமங்களைப் பலமுறை கூறினோமா? உண்மையுரைத்தோமா? பிறருக்கு உபகாரமான சொற்களைச் சொன்னாமா? இந்த உடம்பால் பிறருக்கு உதவி செய்தாமா? ஆலய வழிபாடு செய்தாமா? மனதால் நல்ல சிந்தனைகளைச் சிந்தித்தோமா? மந்திர ஜெபஞ் செய்தாமோ?

இந்தக் கண்களால் தீமை புரியாதிருந்தாமோ? வாக்கால் பொய் புகலாதிருந்தோமா? இந்த உடம்பால் குற்றம் புரிந்தோமா? தீய எண்ணம் எண்ணினோமா?' என்று தம்மை நாமே சோதித்துக் கொள்ளவேண்டும். அப்படி அன்றாடம் துயில் புரிவதற்கு முன் இந்த சோதனையை நாம் நடத்த வேண்டும். தன்னைத் தானே சோதிக்கின்றவன் தீமையினின்றும் விலகி நன்மையடைவான்.

மகாத்மா காந்தியடிகள் சத்தியமாகிய கண்ணாடியைக் கொண்டு தன்னைத்தானே சோதித்துக் கொண்டிருந் தார். அதனால் அவர் வரலாற்றுக்குச் சத்திய சோதனை என்று பெயர்.

இப்போது நம்மில் பலர் தன்னைச் சோதிப்பதில்லை. 'அவன் அப்படி இவன் இப்படி' என்று பிறரைக் குறை கூறியும், 'அவன் ஏன் அங்கு போகின்றான்? இவன் ஏன் இங்கு நிற்கின்றான்?' என்று பிறரைச் சதா சோதிக் கின்றார்கள். இவர்களுடைய அறிவை என்றென்று ரைப்பது? அந்தோ? மதியீனம்.

இதற்கு ஒரு உவமை கூறுகின்றேன்,

கடையில் உள்ள வியாபாரிகள் இரவில் தங்கள் கடையைப் பூட்டுவார்கள் அப்படிப் பூட்டி விட்டுச் சரியாகப் பூட்டினோமா என்று பலமுறை அப்பூட்டை இழுத்துப் பார்ப்பார்கள். சிலர் பிடித்துக் தொங்குவார்கள். சிலர் கொஞ்ச தூரம் போய்த் திரும்ப வந்து ஒரு முறை பூட்டை இழுத்துப் பார்ப்பார்கள். இது பிழையன்று. அப்படிப் பார்ப்பது நல்லது தான்.

ஒரு வியாபாரிதன் கடையைப் பூட்டினான். பூட்டி விட்டு அந்தப் பூட்டையிழுத்துப் பார்க்காமல் அடுத்த கடைப் பூட்டையும், மூன்றாவது கடை, நான்காவது கடைப் பூட்டுகளையும் வரிசையாக இழுத்துப்பார்க்கலானான். அப்படிச் செவானாயின் அவன் மடமையை என்னென்று கூறுவது.

அதுபோல் அநேகர் தன்னைத் தானே சோதிக்காமல் பிறரைச் சோதித்து வீணே அரிய நேரத்தைக் கெடுத்து அவலமாகின்றார்கள்: இராமலிங்க அடிகள் கூறுகின்றார்.:

‘வையமேல் பிறர்தம் கோலமும் நடையும்
வண்ணமும் அண்ணலே சிறிதும்
பையவே ஊன்றிப் பார்த்ததே யில்லை
பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன்’

திருவள்ளுவர் கூறுகின்றார்:

ஏதிலார் குற்றம்போல தன்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னுமுயிர்க்கு.

இனி நம்மை நாம் சரிபார்த்துக் கொள்ள இன்னொரு அளவு கோல் உளது. அதுதான் கனவு. கனவில் நாம் எப்படி தொழிற்படுகின்ம் என்று நினைத்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

பெரும்பாலும் பகலில் நாம் நினைப்பவை பேசுபவை செபவைதான் கனவில் வரும். ஏகதேசமாக எதிர்கால நிகழ்ச்சிகளும் கனவில் வரும்.

அநேகமாக சாக்கிரத்தில் உள்ளவையே சொப்பனத்தில் வரும்.









பால் குடிக்கின்ற குழந்தைகள் பால் குடிப்பது போல் உறங்கும்போது வாயை அசைக்கும். மத்தளம் வாசிப்பவர் உறங்கும் போது கை படபட என்று அசைப்பார்.

ஒருவர் நன்கு தூங்கிக் கொண்டிருந்தார். கண் மூடியவண்ணமாகவே அருகில் படுத்திருந்த ஒருவர் முதுகில் ஓங்கிப் பலமுறை குத்தினார். அவர் எழுந்து இவரை எழுப்பி ‘ஏன் என் முதுகில் இப்படிக் குத்தினா?’ என்று கேட்டார். அவர் பாவம்! வருத்தத்துடன் ‘நான் தபாலாபீசில் தேதி முத்திரை குத்திய பழக்கத்தால்கனவில் அதுபோல் கண்டு உம்மைக் குத்திவிட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கள்’ என்றராம்.

எனவே நமது கனவு நிகழ்ச்சி நமது மன நிலைகளையும் செயல்களையும் விளக்கிச் சான்று பகரும்.

சிலருக்கு ரூபா எடுக்க எடுக்க வந்து கொண்டேயிருக்கின்றாற் போலவும், சிலர் ஒரு பெண்ணைக் கண்டு மோகித்து மணந்து கொள்வது போலவும் இங்ஙனம் ஏதோதோ விதமாகக் கனவு காண்பர். இக் கனவுகள் அவர்களது மன நிலையைக் காட்டும் அட்டவணை.

தாயுமானார் கனவு கண்டனர். எவ்வாறு? அவரே கூறுகின்றார்.

மண்ணீரமை யாலே மயங்காதுன் கையால் என்
கண்ணீர் துடைக்கவும் நான் கண்டேன் பராபரமே
மால் வைத்த சிந்தை மயக்கறஎன் சென்னிமிசைக்
கால் வைக்க வுங்கனவு கண்டேன் பராபரமே.

மைகாட்டு மாயை மயக்கமற நீகுருவா
கை காட்டவும் கனவு கண்டேன் பராபரமே.
மண்ணான மாயை யெல்லாம் மாண்டு வெளியாக இரு
கண்ணார வுங்கனவுகண்டேன் பராபரமே.

ஆண்டாளம்மை கண்ணபிரான் தன்னை மணந்து கொண்டது போல் கனவு கண்டாதகப் பாடியிருக்கின்றார்.

கொடிய கனவு கண்டவர்கள் அதிலிருந்தாவது தமது மன நிலையை நல்வழியில் மாற்றியமைக்க வேண்டும்.

இப்போது நாம் நினைவுடன் பேசுகின்ற பேச்சுதான், நம்மை நாம் மறக்கின்ற போதும் வரும்.


காந்தியடிகளின் திருமார்பில் நான்கு குண்டுகள் பாந்தன. தன்னைத் தான் மறந்தார். அப்போது அவருடைய திருவாக்கிலிருந்து ‘அரே ராம் ராம்’ என்று வந்தது. அநேகர் தன்னை மறந்த மரணப் படுக்கையில் ‘அப்பா! ஐயா! அம்மா!’ என்று பிதற்றுகின்றார்கள்.

தினந்தோறும் தூங்குகின்றபோது வரும் கனவில் நல்லது வந்தால்தானே பெரிய தூக்கமாகிய மரண நித்திரையில் நம் வாயில் இறைவனுடைய நாமங்கள் வரும்.

பகல் முழவதும் தீமையே புரியும் ஒருவன் நல்ல கனவு காணமாட்டான். அதுபோல் வாழ்நாள் முழுவதும் தீவினைகளையே புரிந்தவன் நாவில் மரணப் படுக்கையில் இறைவனுடைய திருநாமம் நிச்சயமாக வராது.

ஒருவர் சாகும்போது நாயைப் பிடித்துக் கட்டு என்றார். உயிர் போ விட்டது. அவர் கடைசி நேரத்தில் தனது நாயை நினைத்தார். நாயை நினைத்து உயிர் விட்டவன் நாயாகத்தான் பிறப்பான்.

சிலர் மரணப் படுக்கையில் எருமைக்கடா விரட்டுகின்றதே என்பார்கள். ஒரு அறிவாளி கூறினான்: ‘இப்போதிருந்தே எதற்காக இறை நாமத்தைக் கூற வேண்டும். நான் உயிர் விடும்போது கூறி விடுகின்றேன்’ என்றான். அது பரீட்சையன்று புத்தகம் வாங்கி விடுகின்றேன் என்று கூறும் மாணவன் கூற்றுக்கு நிகர்.



வெள்ளம் வந்தபின் அணை போட இயலுமா? ஆகவே மரணம் வருமுன் அவனுடைய சரணத்தை நினைக்க வேண்டும்.

முன்னூறு ஆண்டுகளுக்குப் முன் தொண்டை நன்னாட்டில் ஆரனிக்கு அருகில் உள்ள அடையப்பலம் என்ற ஊரில் அப்பையதீதர் என்று ஒரு சிறந்த சிவபக்தர் இருந்தார். அவர் உயர்ந்த வடமொழிப் புலவர். நூற்று நான்கு நூல்கள் எழுதியிருக்கின்றார். அசையாத சிவபக்தி பூண்டவர்.

இத்தகைய சிறந்த உத்தம பக்தருக்கு ஒரு நாள் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ‘நாம் சதா சிவசிவா என்று கூறுகின்றோம். திருஐந்தெழுத்து ஓதுகின்றோம். சிவபிரான் மீது பல பாடல்களைப் பாடுகின்ம். நமது அறிவு மயங்கிய போது நமது நாக்கு, ‘சிவசிவ’ என்று கூறுமா? அப்படிக் கூறினால்தானே நமது பிறப்பு புனிதமடையும். இல்லையேல் நமக்கு உய்வு கிடைக்காதே. ஆகவே நம்மை நாமே சோதித்துவிட வேண்டும்’ என்று எண்ணித் துணிந்தார்.

‘நமது அறிவு மயங்கிப் பித்துப் பிடித்தால் அந்த வேளையில் நமது வாக்கில் கெட்ட சொற்கள் வராமல் சிவநாமம் வருமானால் நமக்கு உய்வு உண்டு. நமது சிவபக்தி உண்மையானது என்று முடிவு கட்டலாம்’ என்று நினைத்தார்.

ஆதலால் தனக்குப் பைத்தியம் எப்படி வரும் என்று யோசனை செதார். ஊமத் தங்கா ஊமத்தம்பூ இவற்றைத் தின்றால் பைத்தியம் பிடிக்கும் என்பது அவருக்குத் தெரியும். அவற்றைத் தின்று பைத்தியம் வந்துவிட்டால் ஒரு வேளை ஆயுள் முழுவதும் பைத்தியமாகவே இருந்து பிறப்பு வீணாகக் கூடாதே என்ற அச்சமும் அவருக்கு வந்தது.



பைத்தியத்தை நீக்கும் ஒரு மருந்தையும் தயாரித்து வைத்துக் கொண்டார். சீடர்களை அழைத்தார். ‘நான் இப்போது இந்த மருந்தைக் தின்னப் போகின்றேன். தின்றவுடன் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும். அப்போது என்ன உளறுகின்றேன் என்று கேட்டு நீங்கள் கவனமாக எழுதி வையுங்கள். பின்னர் இந்த மருந்தைத் தந்து என் பைத்தியத்தை மாற்றி விடுங்கள்’ என்று கட்டளையிட்டார்.

சீடர்கள் ஏடும் எழுத்தாணியும் வைத்துக் கொண்டு அருகில் இருந்தார்கள். அப்பைய திதர் ஊமத்தங்கா ஊமத்தம்பூவை உண்டார். உடனே அறிவு மயங்கியது. பித்தந் தலைக்கேறியது. அந்தப் பைத்திய நிலையில் அவர் திருவாக்கிலிருந்து அதியற்புதமான ஐம்பது சுலோகங்கள் வெளிப்பட்டன. அவர் பைத்தியத்தால் உளறிய பாடல்கள் பரம பவித்திரமாவை அவர் அப்போது தாரை தாரையாக கண்ணீர் சொரிந்து பாடினார். பரமசிவனைத் துதி செய்தார். சீடர்கள் அதிக கவனமாக அவற்றை எழுதினார்கள். அந்த நூலுக்கு 'ஆத்மார்ப்பணத்துதி' என்று பெயர். உன்மத்த பஞ்சாசத், என்றும் கூறுவர்.

இந்த நூல் மிகவும் உயர்ந்தது. உருக்கமானது. பித்தம் பிடித்த நிலையிலும் அப்பைய தீதருக்கு சிவபக்தி மாறவில்லை என்றால் அவருடைய சிவபக்தியை அளக்க வல்லார் யார்? அதனைக் கூறுந் திறமை யாருக்குண்டு? அப்போது அவர் பாடுகின்றார். 'எம்பெருமனே! உனது கருணையை என்னென்று புகழ்வேன்? மிக எளிமையான மலர்களை அடியார்களிடமிருந்து பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நீ மிகப் பெரிய அருளைப் புரிகின்றாய். அடியேன் அர்சிப்பது தும்மைப் பூவால் நீ எனக்குத் தருவது முத்தி வீடு.

அர்க்கத்ரோணப்ரப்ருதி குஸுமைரர்ச்சனம் வேத விதேயம்
ப்ராப்யம் தேந ஸ்மரஹரபலம் மோஸாம்ராஜ்ய லமீதே
ஏதஜ்ஜாநந்நபி சிவசிவ வ்யாத்தயந் காலமாத்மந்
ஆத்மத்ரோஹீ காரணவிவசரோபூயசாத: பதாமி.

இந்தப் பாடல் சிவபெருமானுடைய கருணையின் எளிமையை நமக்கு தெரிவிக்கின்றது. ரோஜா, மல்லிகை, முல்லை, ஜாதி, சண்பகம் முதலிய நறுமலர்களுக்கு விலையுண்டு.

தும்பைப் பூவுக்கு விலையே கிடையாது. அதனை எந்தப் பெண்மணியுஞ் சூடிக்கொள்ளமாட்டாள். ஆகவே நமக்கெல்லாம் எது உதவாதோ அதை இறைவனுக்குச் சாத்தினால் போதும். தும்பைப் பூ எங்கும் கிடைக்கும். யாரும் விரும்பமாட்டார்கள். அழகாகவும் இரா. 'இந்தப் பூக்களையாவது எனக்குச் அர்ச்சியுங்கள். உங்களுக்கு யான் இகபர சௌபாக்கியங்களை வழங்குவேன்' என்று கூறி எம்பெருமான் தும்பை பூவையும் ஊமத்தம் பூவையும் குடிக்கொண்டிருக்கிறார். இத்தனை சுலபமாக சிவபூஜை செய்யலாம்.

ஆண்டவனை ஒரு உத்தரணித் தண்ணீரால் நனைத்து ஒரு தும்பைப் பூவைப் போட்டு விட்டால் போதும், எல்லா நலன்களையும் அவன் அள்ளி வழங்கி விடுகின்றான். இப்படிப் பரம சுலபனாக இறைவன் இருந்தும் ஏனோ சிலர் வழிபாடு புரிவதில்லை.


இந்த அருமையான மனிதப் பிறப்பு மண்ணாகி மட்கிப் போகின்றது. பட்டினத்தார் பாடுகின்றார்:


கண்ணுண்டு காணத் கருத்துண்டு நோக்கக் கசிந் துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர் நிற்க ஈசன் இருக்கையிலே
மண்ணுண்டு போரு தையோ கெடுவீர் இந்த மானிடமே.

அப்பரடிகள் பாடுகின்றார்:

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நிவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமலந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே.


ஆதலால் மானுடப் பிறவியெடுத்தஒவ்வொருவரும் சிவபூஜை செய்து, சிவார்ச்சனை புரிந்து சிவ நாமத்தைச் சொல்லி சிவ பஜனை புரிந்து சிவ பக்தி செய்து சிவபாத இருதயர்களாகத் திகழ்ந்து, பெற்ற பிறப்பைப் பயன்படுத்திக் கொண்டு இனிப்பிறவாத பெற்றியைப் பெறுவார்களாக.





Sri Munneswaram
Kshethra Vinayaka Temple
மகா கும்பாபிஷேக மலர்
Maha kumbabisheka Souvenir


பக்திப் பாடல்கள்
Sri Sankar Publications
01.01.2009



தோத்திர
பாடல்கள்



ஸ்ரீ முன்னேஸ்வர
வரலாறு


HISTORY OF
MUNNESWARAM
TEMPLE
B. S. Sarma


ஸ்ரீ கணபதி
உபநிஷத்
மந்திரங்கள்



ஸ்ரீலலிதா
சஹஸ்நாமார்ச்சனை
திரிசதி நாமார்ச்சனை
அஷ்டோத்ர நாமாவளி



An Introduction to
HINDUISM
B. S. SARMA


Astothra Namavali
(அஷ்டோத்தர நாமாவளி)
English Translation


வேத மந்திரங்கள்


சிவ பூஜைக் கிரியை முறை
Sri Sankar Publications


விநாயக வழிபாடு
Sri Sankar Publications


அஷ்டோத்தர கதம்பம்
Astothra Kathampam


அன்னையின் ஆயிரம் அருள் நாம வழிபாடு
(ஸ்ரீலலிதா சஹஸ்ர நாமஸ்தோத்ரம்)


பா.சிவராமகிருஷ்ணன்


Path to Dharma
தர்ம நெறி
News Letter 1
Sri Sankar Publications
2008